பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 10 2026 MONDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2) மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான கட்டணங்கள் வெளிப்படையாக இடம்பெறுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

3) சமூக நீதிக்கான அறக்கட்டளையை அத்துறைக்கான அமைச்சர் திரு. வன்னி அரசு இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

4) வடகிழக்கு பருவமழை அடுத்த இரண்டு, மூன்று தினங்களுக்குள் தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shaina Manimuthu உட்பட 5 பேர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வென்ற முப்படையைச் சேர்ந்தவர்களுக்கு இன்று புதுதில்லியில் நடைபெற்ற பாராட்டு நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

கடின உழைப்பு மற்றும் விடா முயற்சி பதக்கங்களை பெற்றுத் தந்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஆசிய விளையாட்டு போட்டிகளில் முப்படையைச் சேர்ந்தவர்கள் 6 தங்கம், 11 வெள்ளி, 10 வெண்கலப்பதக்கங்களை வென்றதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்ல வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு தீவிர பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் பதக்கம் வென்றவர்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான கட்டணங்கள் வெளிப்படையாக இடம்பெறுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத்துறை செயலர் திருமதி. *Punya Salila Srivastava* மாநில அரசுகளின் தலைமைச் செயலர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சுகாதார சேவைக்கான கட்டணங்களில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேபோல், மருத்துவச் சிகிச்சைக்காக வெளிநாடுகளிலிருந்து வருபவர்களின் கட்டணங்களும் வெளிப்படையாக அறிவிக்கப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திருமதி. *Punya Salila Srivastava* அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

எய்ட்ஸ் பாதிப்பு இல்லாத மாநிலத்தை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று சென்னையில், எய்ட்ஸ் தொடர்பான தேசிய விழிப்புணர்வு பிரச்சாரத்தின் நிறைவு விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரம் காரணமாக எய்ட்ஸ் பாதிப்பு குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

*HIV* தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்தார்.

>>>>><<<<<

நெசவாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பாக இந்த வாரத்திற்குள் அறிவிப்பு வெளியாகும் என்று கைத்தறித் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி கூறியுள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - விஜய் பாலாஜி 37 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சமூக மேம்பாட்டிற்காக துணைநிற்கும் நிறுவனங்களும், தனிநபர்களும் சமூகநீதி அறக்கட்டளை மூலம் பங்களிக்க முன்வர வேண்டும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. வன்னி அரசு கேட்டுக் கொண்டார்.

இன்று சென்னையில் சமூகநீதி அறக்கட்டளையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக பொருளாதார மேற்பாட்டிற்காக தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திரு. வன்னி அரசு தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் மின்வெட்டே இல்லை என்று மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறிவந்த நிலையில், இன்று தலைமைச்செயலகத்திலேயே மின்வெட்டு ஏற்பட்டுள்ளதாக அஇஅதிமுக கூறியுள்ளது.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அஇஅதிமுக, தலைமைச்செயலகத்தில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பான காணொலியையும் பகிர்ந்துள்ளது.

இதற்கு மின்துறை அமைச்சர் பதில் சொல்வாரா என்றும் அஇஅதிமுக வினவியுள்ளது.

>>>>><<<<<

தமிழகம் முழுவதிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள மின்வெட்டு, இன்று தலைமைச்செயலகத்தையும் எட்டியுள்ளதாகவும், இது கவலை அளிப்பதாக உள்ளது என்றும் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தலைமைச்செயலகத்தில் ஏற்பட்ட மின்வெட்டு காரணமாக அமைச்சர்களின் அறைகளும் இருளில் மூழ்கிய காட்சிகள் சமூகவலைதளங்களில் வெளியானதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்தேவைக்கும், மின்சாரம் கிடைப்பதற்கும் இடையேயான இடைவெளி தான் மின்வெட்டுக்கு காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைக்கு போர்க்கால அடிப்படையில் தீர்வு காண த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

>>>>><<<<<

இதற்கிடையே, தலைமைச் செயலகத்தின் ஒரு சில பகுதியில் மட்டுமே மின்விநியோகத்தில் தற்காலிக தடை ஏற்பட்டதாக மின்வாரியம் கூறியுள்ளது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த மின்தடை ஏற்பட்டதாகவும், இது உடனடியாக சரிசெய்யப்பட்டு மின்விநியோகம் சீரமைக்கப்பட்டதாகவும் மின்வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

அரிசி விலை உயர்வை கட்டுப்படுத்த த.வெ.க. அரசு தவறிவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரிசி விலை, கிலோவுக்கு 20 முதல் 27 ரூபாய்வரை உயர்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏழை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி விலை தொடர்பான பட்டியலையும் திமுக அந்த அறிக்கையில் பகிர்ந்துள்ளது.

>>>>><<<<<

அரசு பள்ளி ஆசிரியர்கள் மீது கூடுதல் பணிச்சுமையை த.வெ.க. அரசு ஏற்றக்கூடாது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காலை மற்றும் மதியஉணவு திட்டத்தை கண்காணிக்க பள்ளியில் உள்ள ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டும் என்ற த.வெ.க. அரசின் உத்தரவு ஏற்புடையதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

செயல்முறை சிக்கல்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளாமல், காலை உணவு திட்டத்தை விரிவாக்கம் செய்த முதலமைச்சர் திரு. விஜய், ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்கள் மீது கூடுதல் பணிச்சுமையை ஏற்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசு பள்ளிகளில் உள்ள காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>><<<<<

மருத்துவப் பணியாளர்களின் கோரிக்கையை த.வெ.க. அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பணிநிரந்தரம், ஊதிய ஊயர்வு மற்றும் பணிப்பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் வலியுறுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இக்கோரிக்கைகள் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருப்பது வேதனையளிப்பதாக உள்ளது என்றும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

வடகிழக்கு பருவமழை அடுத்த இரண்டு, மூன்று தினங்களுக்குள் தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை படிப்படியாக விலகிவருவதாக வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வங்கக்கடலில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டம், முக்கம்பட்டியில் உள்ள அலங்கார மீன்வளர்ப்பு பண்ணைகளில் மத்திய மீன்வளத்துறை செயலர் டாக்டர் *Abhilaksh Likhi* இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது, உடனுக்குடன் தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆட்சியர் திருமதி. பத்மஜா அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

அரியலூரில் பிரதமரின் இல்லந்தோறும் சூரியசக்தி மின்திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த நட்சத்திர ஆமைகளை மீட்ட வனத்துறை அதிகாரிகள், இதுதொடர்பாக ஒருவரை கைது செய்துள்ளனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Shaina Manimuthu* இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

எகிப்தின் கெய்ரோவில் இன்று தொடங்கிய இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 15-3, 15-3 என்ற செட்கணக்கில் உகாண்டாவின் *Claire Namirembe*-யை வென்றார்.

இதர முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்று *Nishchal Chand, Dev Ruparelia, Tanvi Patri, Parul Choudhary* ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

உலக *Skate* விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் *Anirudhan Vinod* மற்றும் *Rutva Prakash* காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*Paraguay*-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் ஜூனியர் பிரிவில் இவர்கள் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

***>>>>>END<<<<<***